புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருமயத்தில் இருந்து பொன்னமராவதிக்குச் செல்லும் புதிய மகளிர் விடியல் பேருந்தை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மண்டல பொதுமேலாளர் முகமது நாசர், ஒன்றியச் செயலாளர்கள் ஆறு.சிதம்பரம், இரா.கணேசன், ஆர்.எம்.கருப்பையா, கே.ஆர்.ராமசாமி, தேவி, சிவகுமார், சிக்கந்தர், அருண் சேகர், டாக்டர் ராஜசேகர பாண்டியன், நீலமேகம், முத்துக்குமார், முல்லை ரமேஷ், அண்ணாதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், அகசிப்பள்ளி ஊராட்சி, மேலேரிக்கொட்டாய் பகுதியில், நெடுஞ்சாலைத்துறை சார்பாக, நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 66 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படவுள்ள தார்ச்சாலை பணிகளுக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பணிகளை துவக்கி வைத்தார். உடன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர்கள் அன்பரசன், சீனிவாசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

பயத்தைப் போக்க போடப்பட்ட மேக் அப்தான் அ.தி.மு.க. பொதுக்குழு!

எடப்பாடிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை மக்கள் பரிசாகத் தருவார்கள்!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, டிச.12–

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :–

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை உயர்த்துங்கள் என்று அதிமுக பொதுக்குழுவில் ஒன்றிய அரசுக்கு நேரடியாக ஒரு கோரிக்கை வைப்பதற்குகூட "போலி விவசாயி எடப்பாடி பழனிசாமிக்கு துணிவில்லை.

10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை மக்கள் பரிசாகத் தருவார்கள்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அண்ணா திமுக அமித்ஷா திமுகவாக மாறி விட்டதை மறைக்க முயற்சித்தாலும் அதிமுக பொதுக்குழு தீர்மானங்கள், பாஜகவின் அடிமை பழனிசாமி என்பதை தமிழ்நாட்டு மக்களுக்கு சொல்லும் வகையிலேயே உள்ளன.

அதிகாரம் என்ற போலி சட்டை!

"கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை; கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்க எடப்பாடி பழனிசாமிக்கு முழு அதிகாரம் என்ற தீர்மானம் பார்ப்பதற்கு எடப்பாடி பழனிசாமியை அ.தி.மு.க.வினர் மத்தியில் "டான் போல காட்டுமே தவிர, அவர் டம்மி என்பது மக்களுக்கும் பா.ஜ.க.வுக்கும் நன்றாகவே தெரியும்.

அ.தி.மு.க. பொதுக்குழு நடப்பதற்கு இரண்டு நாள் முன்புகூட குஜராத்தில் பேசிய அமித்ஷா, "பீகாரை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைக்கும்" என்றார். "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது என்ற வசனம் போல மாப்பிள்ளை பழனிசாமிதான். ஆனால், அவருக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்பதுதான் அமித்ஷா சொன்ன வார்த்தையின் அர்த்தம். ஆனால், அ.தி.மு.க. பொதுக்குழுவில், "அதிகாரம்" என்ற போலி சட்டையை பழனிசாமிக்கு மாட்டியிருக்கிறார்கள்.

அ.தி.மு.க.வினருக்கு நன்கு தெரியும்!

அமித்ஷா அழைப்பின் பேரிலே டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி கார்கள் மாறி அமித்ஷாவை சந்தித்தும், முகமூடி அணிந்து வெளிவந்ததையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்தார்கள். அந்த அமித்ஷா சொல்வதை மீறி எதையுமே எடப்பாடி பழனிசாமியால் செய்ய முடியாது என்பது அ.தி.மு.க.வினருக்கே நன்கு தெரியும். எடப்பாடி பழனிசாமியின் பயத்தை போக்க போடப்பட்ட மேக்அப்தான் பொதுக்குழு.

மெகா கூட்டணி அமைப்பதாக கூறிய எடப்பாடி பழனிசாமியை நம்பி எந்தக் கட்சியும் வர தயாராக இல்லை; 10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு எந்த ஆளுமையும் இல்லை; மக்கள் செல்வாக்கும் கிடையாது என்பது தெளிவாகத்தெளிவாக உணர்ந்த அமித்ஷா, எடப்பாடி பழனிசாமியை மிரட்டி அடிபணிய வைத்து கூட்டணியை அவரே அறிவித்தார் என்பதுதானே நிஜம்.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டவர்கள் டெல்லி சென்று அமித்ஷாவை சந்தித்துவிட்டு வருகிறார்கள். அதற்காக அமித்ஷாவை கண்டித்து ஒருவார்த்தை கூட பேசாத தொடைநடுங்கி எடுபுடி பழனிசாமிக்குதான் கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரம் என்பது மிக சிறந்த நகைச்சுவை.

ஒன்றிய அரசை கண்டிப்பாரா?

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை 17 விழுக்காட்டில் இருந்து 22 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கையை ஒன்றிய பா.ஜ.க. நிராகரித்துவிட்ட விவகாரத்தில், ஒன்றிய அரசைக் கண்டிக்க தைரியம் இல்லாத பழனிசாமி, தி.மு.க. அரசைக் கண்டித்திருப்பது பச்சைத்துண்டு அணிந்துகொண்டு பச்சைதுரோகம் செய்யும் போலி விவசாயி பழனிசாமி என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்.

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை உயர்த்துங்கள் என்று அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஒன்றிய அரசுக்கு நேரடியாக ஒரு கோரிக்கை வைப்பதற்குகூட "போலி விவசாயி எடப்பாடி பழனிசாமிக்கு துணிவில்லை. உண்மையான விவசாயியாக இருந்தால் பிரதமரை டெல்லி சென்று சந்தித்து 22 சதவீதம் வரை உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கினால்தான் கூட்டணியில் தொடருவோம் என நிபந்தனை விதிக்க ஆளுமை வேடம் போடும் எடப்பாடி பழனிசாமிக்கு தெரியும் இருக்கிறதா?

கோவை, மதுரை நகரங்களின் மெட்ரோ திட்டங்களை ரத்து செய்த மோடி அரசை கண்டிப்பதற்கு பதில், ஒன்றிய பா.ஜ.க. அரசு கூறிய மொக்கையான காரணத்தையே அ.தி.மு.க. பொதுக்குழு தீர்மானத்திலும் நியாயப்படுத்தி கோவை, மதுரை மக்களுக்கு பெரும் துரோகத்தை செய்திருக்கிறார்கள்.

புலம்புவதே வாடிக்கை!

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துவரும் வளர்ச்சியை தினந்தோறும் பார்த்து வயிற்றெரிச்சலில் தவிக்கும் எடப்பாடி பழனிசாமி, போகின்ற இடங்களிலெல்லாம் புலம்புவதை வாடிக்கையாக வைத்திருந்தார். அதையே அ.தி.மு.க. பொதுக்குழுவின் தீர்மானங்களாகவும் வடித்துள்ளார். தமிழ்நாட்டின் கடன் சுமை கட்டுக்குள் இருப்பதாக சி.ஏ.ஜி. வெளியிட்ட அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் கடன் சுமை அதிகரித்துவிட்டதாக அ.தி.மு.க. பொதுக்குழுவில் அவதூறு பரப்பப்பட்டுள்ளது.

2011ம் ஆண்டு தி.மு.க. ஆட்சி நிறைவு பெறும் போது தமிழ்நாட்டின் மொத்தக் கடன் 1,01,349 கோடி ரூபாய்தான். 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சி நிறைவடையும்போது 2021ம் ஆண்டில் தமிழ் நாட்டின் கடன் 4,80,300 கோடி ரூபாய். அதாவது 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கடன் சுமார் 5 மடங்கு அதாவது கிட்தட்ட 500 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரம் தி.மு.க. ஆட்சியில் தற்போது 9 லட்சத்து 20 ஆயிரம் கோடி அளவிற்கு கடன் இருந்தாலும் 2021ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததிலிருந்து 93 சதவீதம் அளவிற்கே கடன் உயர்ந்துள்ளது.

ஒரு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியான ஜி.எஸ்.டி.பி.யை ஒப்பிடும்போது கடன் அளவு எவ்வளவு என்பதுதான் கடன் சுமையை தீர்மானிக்கும் காரணி. அந்த வகையில் தமிழ்நாட்டின் DEPT TO GSDP RATIO 26.4 சதவீதம்தான். தமிழ்நாடு நிதி பொறுப்புச் சட்டம் 2003 நிர்ணயித்த கடன் வரம்பைவிட குறைவான அளவில்தான் தமிழ்நாட்டின் கடன் அளவு உள்ளது.

பொய்யான புள்ளி விவரம்!

"முதலீடுகள் இல்லை, நிறுவனங்கள் இடம் பெயர்கின்றன, வேலை வாய்ப்பு இல்லை, ஏமாற்றும் புள்ளி விவரங்கள் என பொத்தாம் பொதுவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய அ.தி.மு.க., தனது ஆட்சிக்காலத்தில் இவ்வளவு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன; அதிலிருந்து தி.மு.க. ஆட்சியில் இவ்வளவு கோடி குறைவாக உள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட 'இந்த' நிறுவனம் தற்போது வேறு மாநிலத்திற்கு சென்று விட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் இத்தனை இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கினோம்; தற்போது அதைவிட குறைந்த வேலை வாய்ப்புகளே உருவாக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு கூறியிருந்தால் முதலீடு ஈர்ப்பு, தொழில் வளர்ச்சி விஷயத்தில் அ.தி.மு.க. ஆட்சியின் யோக்கியதை தெரிந்துவிடும் என்பதால் பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டை கூறியிருக்கிறது அ.தி.மு.க.

2016 முதல் 2021 வரையிலான அ.தி.மு.க. ஆட்சியில் 15,543 கோடி ரூபாய் முதலீட்டில் 10,316 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்திடும் 21 தொழிற்சாலைகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு; அவற்றுள் 12 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டன. ஆனால், திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 9.74 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 31 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த முதலீடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் முதல் கட்டமாக 46 தொழிற்சாலைகள் தங்களது உற்பத்தியை தொடங்கிவிட்டன. அதனால்தான் தமிழ்நாடு கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 11.19% இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை அடைந்து இந்தியாவில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. இந்த வளர்ச்சியை பழனிச்சாமியால் பொறுத்துக் கொள்ள முடியாமல், ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்கிய புள்ளி விவரத்தையே "பொய்யான புள்ளி விவரம் என்று கூறியுள்ளார்.

கலவர அரசியலுக்கு துணை போகும் பழனிசாமி!

திருப்பரங்குன்றம் கார்த்திகை தீபம் விவகாரத்தில் நீதித்துறையின் மதச்சார்பின்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அடம்பிடிக்கும் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு எதிராக தி.மு.க. கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தை வட மாநிலங்களைச் சேர்ந்த எம்.பிக்கள் உள்பட 120 மக்களவை எம்.பிக்கள் ஆதரித்துள்ளனர். ஆனால் மற்ற மாநிலங்களில் மதக் கலவரம் செய்தே ஆட்சியை மாற்ற பா.ஜ.க. முயற்சி செய்து பலனடைந்தால் தமிழ்நாட்டிலும் அந்த பலனை அறுவடை செய்யலாம் என்ற நப்பாசையில் எடப்பாடி பழனிசாமி பா.ஜ.க.வின் கலவர அரசியலுக்கு துணை போகும் வகையில் அ.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார். வழக்கம்போல் உச்சிப் பிள்ளையார் கோயில் அருகே தீபத்தூணில் தீபம் ஏற்றப்பட்டது; தீபம் ஏற்றிவிட்டதை மறைத்து, தீபமே ஏற்ற அனுமதி மறுக்கிறது தி.மு.க. அரசு என்று அவதூறு பரப்பும் மதவெறி கும்பலுக்கும் அவர்களுக்கு துணையாக இருக்கும் எடப்பாடி பழனிசாமிக்கும் மதசார்பின்மைக்கு முன்மாதிரியாக திகழும் தமிழ்நாட்டு மக்கள் 2026 தேர்தலில் பாடம் புகட்டுவார்கள்.

தி.மு.க. அளித்த 505 வாக்குறுதிகளில் 364 வாக்குறுதிகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. 40 திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. மொத்தமாக 404 திட்டங்கள் அரசின் செயல்பாட்டில் உள்ளன. 37 திட்டங்கள் ஒன்றிய அரசின் நிதி பங்களிப்பு இல்லாமல் நிலுவையில் உள்ளன. 64 திட்டங்கள் மட்டுமே இன்னும் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத திட்டங்களாக உள்ளன.

தேர்தல் வாக்குறுதியாக சொல்லப்படாத இல்லம் தேடி கல்வி, காலை உணவு திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ் புதல்வன், இன்னுயிர் காக்கும் 48 திட்டம் போன்ற திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தி சொல்லியது மட்டுமல்ல சொல்லாததையும் செய்யும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என தமிழ்நாட்டு மக்கள் பாராட்டுவதாலேயே எடப்பாடி பழனிசாமி பொய்யையும் அவதூறையும் பரப்பி ஆதாய அடைய முயற்சிக்கிறார்.

எட்டப்பன் வேலை பார்க்கும் எடப்பாடி!

பா.ஜ.க.வின் மதவெறி கொள்கைக்கு எதிரியாக இருப்பது தி.மு.க. மட்டுமல்ல தமிழ்நாடே என்பதால் தமிழ் நாட்டுக்கு துரோகத்தையும் வஞ்சகத்தையுமே மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசு துணிந்து செய்கிறது. அப்படியிருந்தும் பா.ஜ.க.வுடன் கூட்டணிவைத்து எட்டப்பன் வேலை பார்க்கும் எடப்பாடி பழனிசாயின் புலம்பலை தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பார்கள்; 10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை பரிசாக தருவார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்துள்ளார்.

மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது

தமிழ்நாட்டில் மாணவர்கள் இடைநிற்றல் குறைவு!

மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமுவின் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்

புதுடெல்லி, டிச.12–

நாட்டில் சமீப ஆண்டுகளாக தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளிடையே இடைநிற்றல் அதிகமாக இருக்கிறதா? அதற்கு காரணம் என்ன? அதை சரி செய்ய ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய கல்வித்துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அளித்த பதில்:

ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித் தகவல் தொகுப்பில் 2020–21 முதல் 2024–25 வரையிலான ஐந்தாண்டுகால தகவல் மற்றும் தரவுகள்படி, நாடுதழுவிய அளவில் தொடக்கக் கல்வி, உயர் தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி வரையிலான வகுப்பு களில் மாணவர்கள் இடைநிற்றல் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

வளர்ந்த மற்றும் பெரிய மாநிலங்களைப் பொறுத்தவரை, தமிழ் நாட்டில் தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வி பயிலும் மாணவர்களிடையே இடை நிற்றல் என்பது சுமார் 2 சதவிகிதம்தான். சில ஆண்டுகளில் இடைநிற்றலே இல்லை என்ற அளவிலும் தமிழ் நாட்டில் நல்ல சூழல் இருக்கிறது. இதுவே மற்ற மாநிலங்களில் இடைநிற்றல் 8 சதவிகிதம் வரை இருக்கிறது. உயர்நிலைக் கல்வியைப் பொறுத்தவரை, பெரிய மாநிலங்களில் 30 சதவிகிதம் வரை இடைநிற்றல் நடக்கிறது. தமிழகத்தில் இது 6 முதல் 8 சதவிகிதமாக இருக்கிறது.

அதேபோல, பட்டியலின மாணவர்களிடையே இடைநிற்றல் தரவுகளைப் பார்த்தால், மற்ற மாநிலங்களில் 35 சதவிகிதம் வரை இடைநிற்றல் உள்ள நிலையில், தமிழகத்தில் இது 10 சதமாக இருக்கிறது.

கல்வி பொதுப் பட்டியலில் உள்ளது. மிகப் பெரும்பாலான பள்ளிகள் மாநில அரசுகளின் நிர்வாகத்தின் கீழ் வருகின்றன. ஆனாலும் மாநிலங்களுக்கு சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படு கிறது. பிரதமரின் போஷன் திட்டத்தின் கீழ் அங்கன்வாடி முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது.

இதுதவிர, இடைநிற்றலை முழுமையாகத் தடுக்கவும் பள்ளியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், கூடுதல் பள்ளிகள் திறப்பது, பள்ளிகளின் உட்கட்டமைப்பை பலப்படுத்துவது, பள்ளிகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவது, தங்குமிட வசதிகளை அதிகரிப்பது, இலவச தொழிற்பயிற்சி, இலவச புத்தகங் கள், இலவச சீருடை வழங்கவும் தனியாக நிதி உதவி அளிக்கப்படுகிறது. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு தனியாக நிதி மற்றும் உபகரண வசதிகளும் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் தரவுகள் மற்றும் வேலைக்கு அமர்த்தப்படுபவர்களின் பின்னணியை ஆராயும் வருடாந்திர அறிக்கையின்படி, பள்ளி செல்லும் குழந்தைகள் இடையிலேயே அதை விட்டுவிடும் நிலைக்கு பல காரணங்கள் உள்ளன.

பெற்றோருக்கு வரும் வருமானம் போதாமல், குழந்தைகள் வேலைக்குச் செல்வது, கல்வியில் ஆர்வம் இல்லாமை, வீட்டுச் சூழல் கல்வி இரண்டையும் ஒருங்கிணைத்து சமாளிக்க முடியாத நிலை, மாணவர்களின் ஆரோக்கிய குறைவு, குழந்தை களுக்கு கல்வி முக்கியம் என்பதை உணராத பெற்றோர் என பல விஷயங்கள் இந்த இடைநிற்றலுக்கு காரணங்களாக உள்ளன. இவற்றை நிரந்தரமாகக் களைய பல்வேறு அமைச்சகங்கள் மூலமாக தேவையான தொடர் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி பதிலளித்தார்.

ஒன்றிய அரசு மாநிலங்களைக் கைகாட்டும் தந்திரம் கூடாது!

பெண் ரெயில் பயணிகளின் பாதுகாப்பில் அலட்சியம் ஏன்?

நாடாளுமன்றத்தில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, டிச.12-

பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்புக்கான திட்டங்களை உருவாக்குவதில் அலட்சியம் காட்டும் ஒன்றிய அரசு தனது இயலாமையை திசைதிருப்ப 'லாஜிக்' இல்லாமல் மாநிலங்களை கைகாட்டும் தந்திரம் என்றும் ரயில்வே அமைச்சரின் பதிலுக்கு எம்.பி. கே.இ.பிரகாஷ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

24 மணி நேரத்திற்கும் மேலாக தனியாக ரயிலில் பயணிக்கும் பெண்களுக்காக செயல்படுத்தி வரும் பாதுகாப்பு திட்டங்கள் குறித்து, ரயில்வே அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதற்கு அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதையே உணராமல் பொறுப்பற்று பதில் அளித்திருக்கிறார் ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஸ்ணவ்.

அவரது பதிலில் இருந்து, பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்பு மீது ஒன்றிய அரசு கொண்டிருக்கும் அலட்சியம், திட்டங்களை உருவாக்குவதில் பலமடங்கு பின்தங்கியிருப்பது, நிர்பயா நிதியையும் சரியாக பயன்படுத்தாதது ஆகியவை அம்பலமாகியுள்ளன.

லாஜிக் இல்லாமல் மாநில அரசை கைகாட்டும் தந்திரம்!

24 மணி நேரத்திற்கும் மேலாக தனியாக ரயிலில் பயணிக்கும் பெண்களின் பாதுகாப்புக்காக ரயில்வே அமைச்சகம் உருவாக்கியுள்ள 'Mechanism' என்ன என்பதே எனது கேள்வி. இதற்கு, சட்டம் ஒழுங்கு மாநில அரசின் கீழ் வருவதால், ஒன்றிய அரசு நேரடியாக பொறுப்பேற்காது என்று அமைச்சர் பதிலளித்துள்ளார். இதை விட அமைச்சர் பதவியில் இருக்கும் ஒருவர், நாடாளுமன்றத்தில் பதில் அளிக்க முடியுமா எனத் தெரியவில்லை.

ரயில்வே, முற்றிலும் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள துறை. இதற்கான கொள்கைகளை வகுத்து, திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரம் ஒன்றிய அரசின் வசமே உள்ளது. இதோடு, RPF மூலம் களத்தில் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதிலும் ஒன்றிய அரசுக்கு பொறுப்பு உண்டு.

'மேரி சஹேலி' சோதனைத் திட்டமாகவே இயங்குகிறது; நாடு முழுக்க பயன்பாட்டில் இல்லை:

500 பெண் RPF அதிகாரிகளை மட்டும் கொண்ட 'மேரி சஹேலி' திட்டம் 'வெற்றிகரமாகச்' செயல்படுவதாகவும் நாளொன்றுக்குக் சராசரியாக ரயில்களில் சுமார் 250 RPF குழுக்கள் பணியமர்த்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் மூலம், பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது என்பதே அமைச்சர் உணர்த்துவது.

இந்திய ரயில்வேயில் நாளொன்றுக்குச் சுமார் 13,000க்கும் மேற்பட்ட பயணிகள் ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதில், வெறும் 500 ரயில்களுக்கு மட்டும் 'மேரி சஹேலி' திட்டம் செயல்படுத்தப்படுவதாகக் கூறுவது, அலட்சியமான, உண்மையை மறைக்கும் பதில்.

மொத்த ரயில்களில் 4%க்கும் குறைவான ரயில்களில் செயல்படும் திட்டம் முழுமையானது அல்ல, அது ஒரு 'சோதனைத் திட்டம் (Pilot Project)' மட்டுமே. இதை விரிவுபடுத்துவது குறித்தும் அமைச்சர் பதிலில் எதுவும் குறிப்பிடவில்லை.

புதிய தொழில்நுட்பங்களுக்கு முன்னேற முயலாத அல்லது இயலாத, காலாவதி மனநிலை:

'Travel Check Calls' A 'Digital Alert Systems' போன்ற நவீன பாதுகாப்பு அமைப்புகள் அறிமுகப்படுத்தப்படுமா என்ற கேள்விக்கு, நேரடியாக பதில் அளிக்காமல் அமைச்சர் தவிர்த்திருக்கிறார். இதற்கான சமாளிப்பாக, ஏற்கெனவே உள்ள 139 அவசர உதவி எண், சிசிடிவி கேமிராக்கள் மற்றும் 'மேரி சஹேலி' ஆகியவற்றையே, எண்களை இட்டு பட்டியலிட்டிருக்கிறார்.

உலகின் பல நாடுகளில் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அதிநவீன கண்காணிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த எச்சரிக்கை அமைப்புகள் (Albased alerts) பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் நாட்டில் பேருந்துகளிலேயே அந்த எச்சரிக்கை அமைப்புகளை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மாநில அரசு அமல்படுத்தி விட்டது.

ஆனால், உலகின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான இந்திய ரயில்வேயின் அமைச்சர், தொலைபேசி உதவி எண்கள், சிசிடிவி கேமிராக்களையே பட்டியலிடுகிறார்.

நிர்பயா நிதி வெறுமனே டேப்லெட்டுகள் வாங்குவதற்காக இல்லை.

'மேரி சஹேலி' குழுக்களுக்கு நிர்பயா நிதியில் இருந்து டேப்லெட்டுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

மேலும், ரயில் நிலையங்களில் சிசிடிவி நிறுவவும் இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக கூறியிருக்கிறார்.

'நிர்பயா நிதி' என்பது பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கப் பரந்த அளவிலான, நிரந்தர உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி. வெறும் சில டேப்லெட்டுகளை வாங்கியதையே நிதியைப் பயன்படுத்தியதற்கான ஆதாரமாகக் காட்டுவது ஏற்புடையதாக இல்லை.

புதிய, விரிவான, நிரந்தரப் பாதுகாப்பு அமைப்புகளை அமைப்பதற்கு நிர்பயா நிதியை ரயில்வே பயன்படுத்த வேண்டும். மேலும், இந்த நிதி குறித்த முழு வெளிப்படைத்தன்மையை கடைப்பிடிக்க வேண்டும். இது கட்டாயம்.

வெற்று விளம்பரங்கள் மற்றும் பெயரளவு திட்டங்களின் பின்னால் மறைந்து கொள்ளாமல், பெண் பயணிகளின் பாதுகாப்பிற்கான கடமையையும் அதிகாரத்தையும் உணர்ந்து ரயில்வே துறை செயல்பட வேண்டும். நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி பெண் பயணிகளின் பாதுகாப்பு அமைப்பை பல மடங்கு வலுவாக்கி, அவர்கள் அச்சமின்றி பயணிக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப மாநில துணைச் செயலாளராக திரு.**எம்.ராஜராஜன்** (218, சேலம் மெயின் ரோடு, குமாரபாளையம் நாமக்கல் மாவட்டம்) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை, – 600 018.
நாள் : 10.12.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மு. பழனி
டிசம்பர் 12 (2022)

கழகத்தின் துவக்க கால உறுப்பினரான இவர், வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத்தலைவராகவும், 40 ஆண்டுகள் ஒன்றிய பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் பொதுநல மன்றத்தின் செயலாளராக இருந்தவர்.

இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் மற்றும் நெருக்கடி காலத்தில், கலைஞர் அவர்களின் கட்டளையேற்று கருப்புக் கொடி காட்டி, காவல் துறையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.